# எட்டுத்தொகையில் பியர்ஸ்-ன்குறியியல் கோட்பாடு

**பா.பாண்டிச்செல்வி**

*உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி*

Open Access

Manuscript ID: BIJ-SPL4-Jan26-MD-084

Subject: Tamil

Received : 01.09.2025
Accepted : 22.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si4.25.Jan084

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

## ஆய்வுச் சுருக்கம்

*அகன்ற இப்பிரபஞ்சத்தில் ஏதேனும் ஓர் உயிருள்ள அல்லது உயிரற்ற பொருளின் பண்பைக்குறிக்கும் படிமம் (icon), ஒரு தனியனைச் சுட்டிக் காட்டும், ஒரு சுட்டுக்குறி (index) ஆகியன ஒருகுறியீட்டின் முக்கிய அம்சங்களாக அமைகின்றன. இதனைக் குறிக்கும் வகையில் மேலைநாட்டு அறிஞரான பியர்ஸ் தனது குறியியல் பற்றியக் கோட்பாட்டினை முன்வைக்கிறார். பியர்ஸ் குறிகளின் வகைகளை "இருபத்தேழு" வகையாக வகுத்துள்ளார். பின் அவ்வகையிலிருந்து சிறப்பான ஒன்பது வகைகளை தோ்ந்தெடுத்து பிரித்து அடையாளங்கண்டுள்ளார். ஒவ்வொரு குறியீடுகளும் ஒரு தனித்துவமான அடையாளப் பண்புகளைக் கொண்டும் விளங்குகிறது என்கிறார் பியர்ஸ்குறி என்பது மூன்று வகையினங்களில் பங்கேற்கக் கூடியது என்று குறியின்வகைகளை மூன்று வகையாகக் குறிப்பிடுகிறார். சங்ககால அகத்திணை பாடல்களில் குறிப்பிடத்தக்க நற்றிணை, கலித்தொகை, ஐங்குறுநூறு ஆகியவற்றின் நெய்தல் திணைகளில் பேசப்பட்டுள்ள குறியீட்டு மொழிகளைப் பற்றி விரிவாக இவ்இயலில் அறியமுடிகிறது. குறியீட்டின் அடையாளப்பண்புகளை சொற்குறி, ஒலிக்குறி, படக்குறி, பொருட்குறி என நான்கு வகையாக வகைப்படுத்துகிறார்.*

***திறவுச்சொற்கள்:*** *எட்டுத்தொகை அகநூல்கள், நெய்தல் திணை, குறி வகைகள், குறி அடையாளங்கள்.*

அகன்ற இப்பிரபஞ்சத்தில் ஏதேனும் ஓர் உயிருள்ள அல்லது உயிரற்ற பொருளின் பண்பைக்குறிக்கும் படிமம் (icon), ஒரு தனியனைச் சுட்டிக் காட்டும், ஒரு சுட்டுக்குறி (index) ஆகியன ஒருகுறியீட்டின் முக்கிய அம்சங்களாக அமைகின்றன. இதனைக் குறிக்கும் வகையில் மேலைநாட்டு அறிஞரான பியர்ஸ் தனது குறியியல் பற்றியக் கோட்பாட்டினை முன்வைக்கிறார் ."ஒருபொருள் , யாரோஒருவருக்கு, ஏதோ ஒருமுறைமையில் விளங்குவது "[1]என குறி என்பதற்கு வரையறைக் கூறுகிறார். "குறி (sign), பொருள் (object), விளக்கீடு அல்லது அர்த்தம் (interpretant) ஆகியவற்றின்மும்முனைத்தொடர்புதான்குறி"[2]என்கிறார்.

### பியர்ஸ் சுட்டும் குறியின் வகைகளும் அடையாளங்கள்

பியர்ஸ் ,குறியின் வகைகள் இரண்டு வகை அடையாளங்களின் மூலம் வெளிப்படக்கூடியது என்கிறார் .அவையாவன,
image குறியீட்டின் அடையாளங்கள்
வெளிப்படையான மறைமுகமான முறை

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

(காட்சிரூபத்தில் வெளிப்படுபவை)

(அரசியல்முறைமையில் வெளிப்படுபவை)

குறியீடு என்பது பொருளினை அதன் அடையாளங்களின் வாயிலாக மட்டுமே வெளிப்படுத்துகிறது. மேலும் இயற்கையை மட்டுமன்றி மனிதஉருவங்களையும் அடையாளங்களாகக் கொண்டும் காணப்படுகின்றன.

மேலும், பியர்ஸ் குறிகளின் வகைகளை " இருபத்தேழு" வகையாக வகுத்துள்ளார் .பின் அவ்வகையிலிருந்து சிறப்பான ஒன்பது வகைகளை தேர்ந்தெடுத்து பிரித்து அடையாளங்கண்டுள்ளார். அவற்றுள் முதன்மைத்தன்மையாக இருக்கக்கூடிய முதல் மூன்று வகையான,

1. உருவக்குறி
2. சுட்டுக்குறி
3. குறியீட்டுக்குறி

குறித்து ஆராயப்படுகின்றன.

**பியர்ஸ் கூறும்** குறி விளக்கம்

ஒவ்வொருக் குறியும் மூன்று வகையான தனித்தன்மை வாய்ந்த விளக்கங்களைத் தன்னகத்தேக் கொண்டு காணப்படுகிறது என பியர்ஸ் கூறுகிறார். அவை,

1. உடனிகழ்வுவிளக்கம் - ஓர் குறியினைப் பார்த்தவுடன் புலப்படுவது.
2. செயல்திறவிளக்கம் - குறிப்பிட்ட சூழலைக் கூர்ந்து உற்று நோக்கி மீண்டும் ஆராய்ந்து நோக்குகையில்புலப்படுவது.
3. முடிவானவிளக்கம் - ஓர் குறிப்பிட் சூழலில் அந்தப்பொருள் அல்லது குறிப்பானது எந்தப் பொருண்மையை முதன்மைப்படுத்தி விளக்குகிறது என்ற வகையில் நோக்குவது ஆகும்.

ஒவ்வொரு குறியீடுகளும் ஒரு தனித்துவமான அடையாளப் பண்புகளைக் கொண்டும் விளங்குகிறது என்கிறார் பியர்ஸ். அவை,

1. சொற்குறி
2. ஒலிக்குறி
3. படக்குறி
4. பொருட்குறி

என்ற நான்கு வகையான பண்புகளில் வெளிப்படுகின்றன .ஒருபொருள் யாரோ ஒருவருக்கு ஏதோ ஒரு முறைமையைப் பற்றி தெளிவாக விளக்குவது குறி – பொருண்மைவிளக்கம்ஆகும்.

**குறியீட்டு அடையாளப் பண்புகள்**

"ஒரு பொருள் யாரோ ஒருவருக்கு , ஏதோ ஒருமுறையில் விளங்குவது"[3]

குறியீட்டின் அடையாளம் எனப்படுகிறது.

**சொற்குறி**

சொற்குறி என்பது அறிஞர்கள் தான் கூற எண்ணுகின்ற கருத்துக்களை ஒருசிலக் சொற்குறிகளின் மூலம் மறைமுகமாகக் கூறுவதாகும். இலக்கணங்களின் வாயிலாக பார்க்கும் போது உவமைச் சொற்களைக் கூறலாம்.

**"அருளாய் ஆகலோ கொடிதே இருங்கழிக்**
**குருளை நீர்நாய் கொழுமீன் மாந்தி**
**தில்லை அம்பொதும்பில் பள்ளி கொள்ளும்"**

**(நற். பா.195. 1: 3)**

இவ்வரிகளின் மூலம்தலைவியை திருமணம் செய்துக்கொண்டுபின் அவளை அருள்புரியாமல் இருப்பது தலைவனின் குணமாகக்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

கருதப்படுகிறது. அதனை , நீர்நாயானது கொழுத்த மீன்களைத் தின்று விட்டு புதர்களிடத்து சென்று துயில்கொள்வதுபோல ஆசிரியர்படைத்துள்ளார். இச்செய்யுளில் நெய்தல் தினணயின் விலங்கான 'நீர்நாய்' தலைவனைக் குறிப்பதாகவும், சிறியமீன் தலைவியாகவும் உவமைப்படுத்தப்பட்டுள்ளது

**ஒலிக்குறி**

ஆதிகாலத்தில் வாழ்ந்தமக்கள் மொழியறியாத போது ஒருசில வார்த்தைகள் இல்லா ஒலிக்குறிப்புகளின் மூலம் தனது தகவல்களை ஒருவருக்கொருவர் பறிமாறிக் கொண்டனர். அவ்வாறு தன்மனத்தில் தோன்றும் எண்ணங்களை ஒலிகளின் மூலம்வெளிப்படுத்துவதே 'ஒலிக்குறி' எனப்படும்.

**"ஒலி அவிந்து அடங்கி, யாமம் நள்ளென,**
**கலி கெழுபாக்கம் துயில் மடிந்தன்றே**
**தொன்று உறை கடவுள் சேர்ந்தபராரை**
**மன்றப் பெண்ணை வாங்கு மடற்குடம்பைத்**
**துணை புணர்அன்றில் உயவுக்குரல்**
**கேட்டொறும்"**

**(நற்.பா.303)**

கடல் போன்று ஆரவாரம் மிக்க ஊராகிய நெய்தல் நில ஊரான "பாக்கம்" ஒலி அடங்கிய யாம நேரத்தில் 'நள்' என்னும் அமைதி ஒலியுடன் தூக்கத்தில் ஆழ்ந்துக் கிடக்கும். அந்தப்பனைமரத்தில் இருந்துக்கொண்டு ஆண்,பெண் அன்றில் பறவைகள் தங்கள் புணர்ச்சியின் போது பேசிக்கொள்ளும் ' உயவுக்குரல்' கேட்கும். இவ்வரிகளில் அன்றில் பறவைகளின் ஒலியானது தலைவன் தலைவியரின் ஊடல்மொழி ஒலிகளுக்கு குறியீடாக வந்துள்ளது.

**படக்குறி**

உலகில் முதலில் தோன்றிய மனிதன்தனது உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்துகையில் ஓவியங்களின் மூலமாகவும் காட்சிப்படங்களின் மூலமாகவும் வரைந்து வெளிப்படுத்துவர். கவிஞர்தான் எண்ணத்தில் தோன்றிய கருத்துக்களை படக்காட்சிகளின் மூலம்வெளிப்படுத்துவதே படக்குறிஆகும்.

**"மாமலர் முண்டகம் தில்லையோட ஒருங்குஉடன்**
**கானல் அணிந்த உயர்கணல் எக்கர் மேல்,**
**சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த**
**நீர் மலிகரகம் போல் பழம் தூங்கு முடத்தாழைப்**
**பூமலர்ந்தவை போல, புள்அல்கும் துறைவ! கேள்"**

**(கலி.பா.133. 1 : 5)**

இவ்வரிகளில், உயிர்கொலை சூழும் குருகுகள் தாழைமலர்போல் தோன்ற என்பதனான் நமக்குவருத்தம் செய்யும் தலைவன்போல் தோன்றின என்பதனான் நமக்கு வருத்தம் செய்யும் தலைவன் பிறர்க்கு நல்லவனாகத் தோன்றினான் என்றும் உள்ளுறையாகக் காணப்படுகிறது. இங்கு தலைவனை குருகான ஐந்தறிவு உயிருடன் இணைக்கூறி அவனைக் காட்சிப்டுத்தும் விதத்தினை எடுத்துரைக்கின்றனர்.

**பொருட்குறி**

நம் கண்ணகளுக்கு புலப்படுகின்ற ஒவ்வொருப் பொருள்களும் ஓர்குறியீடாகவே விளங்குகின்றன.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**”மாலையே நீ- தை யெனக் கோவலர்**
**தனிக்குழல் இசைக்கேட்டு,**
**பையெனற் நெஞ்சத் தேம்பக்கம் பாராட்டுவாய்**
**செவ்வழி யாழ் நரம்பு அன்னகிளவியார் பாராட்டும்**
**பொய் தீர்த்த புணர்ச்சியுள் புதுநலம் கடிகல்லாய்”**

**(கலி.பா.118)**

‘தை’என்னும் ஓசையுடன் கோவலர் ஊதும் குழல்இசைக்கேட்டு ‘பை’என்று நெஞ்சத்தைப் பறிகொடுத்து விட்டுவருந்துகின்ற என்னிடம் வந்து உன் கைவரிசையினைக் காட்டுகிறாய் . யாழில் தோன்றும் ‘செவ்வழிப்பண்‘ போன்ற மொழிப்பேசி உறவாடிக் கொண்டு குற்றமற்றத் தழுவுதலைக் கொண்டிருப்பவரிடம் உன்கைவரிசை செல்லாதல்லவா? என்று கூறும் விதமாகக் ஆசிரியர் கூறுகிறார். இவற்றில், யாழின் தன்மையை மொழியுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

**பியர்ஸ் குறி வகைகள்**

குறி என்பது மூன்றுவகையினங்களில் பங்கேற்கக் கூடியது என்று குறியின்வகைகளை மூன்று வகையாகக் குறிப்பிடுகிறார். மேலும், பியர்ஸ் குறியின் வகைகளை இருபத்தியேழாக வகுத்து, அவற்றிலிருந்து ஒன்பது வகையாக வகுத்து அதனினும் இருந்து சிறந்த மூன்று குறிவகைகளை வரிசைப்படுத்தியுள்ளார்

1. உருவக்குறி
2. சுட்டுக்குறி
3. குறியீட்டுக்குறி

**உருவக்குறி**

“உருவக் குறி என்பது ஒரு குறிப்பானுக்கும், அதன் குறிப்பீட்டுக்கும் இடையிலான உருவ ஒப்புமையின் அடிப்படையில் அறிப்படுவது”[4]ஆகும்.

**“ஞாலம் மூன்று அடித்தாய முதல்வற்கு**
**முதமுறைப் பால் அன்ன மேனியான் அணி பெறத்தை இய**
**நீலநீ ர்உடைபோல, தகைபெற்ற வெண்திரை**
**வால்எக்கர் வாய் சூழும் வயங்கு நீர்த்தண் சேர்ப்ப!”**

**(கலி. பா.124.1: 5)**

உலகம் மூன்றையும் தன்திருவடியினால் அளந்த முதல்வனாகிய திருமாலுக்கு, மூத்தவன் என்றமுறைமையில் உடையவன் பால்போன்ற மேனியாய பலராமன், அவன் அழகுபெற அணிந்த நீலநிற ஆடையைப்போல், அழகுபெற்ற வெண்திரையினை உடைய கடல், வெண்மை நிறமுடைய இடுமணலிடத்தே வந்து சூழும் விளங்குகின்ற நீர்என, பலராமன் மற்றும் திருமாலின் உருவமானது கடல்பரப்பிற்கு உவமையாக் கூறப்படுகிறது. குறிப்பானுக்கும் குறிப்பீட்டிற்கும் இடையிலான ஒப்புமைத் தன்மையே உருவக்குறியை உயிர்ப்பிக்கிறது.

**சுட்டுக்குறி**

“சுட்டுக்குறி என்பது ஒன்றின் வழித் தொடர்ச்சியாக ஒருக்கருத்தினைப் பெற உதவுவது ஆகும்.”[5]

**“பெருங்கடற் கரையது சிறுவெண்காக்கை**
**அறுகழிச் சிறுமீன் ஆரமாந்தும்**
**துறைவன் சொல்லிய சொல் என்**

Bodhi International Journal of Research in Humanities, Arts and Science
Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**நிறை ஏர் எல்வளை கொண்டு நின்றதுவே."**

**(ஐங். பா.165)**

குறிப்பான் குறிப்பீடு ⟶ சுட்டுக்குறி (காக்கை) (பறக்கும் (வெண்காக்கைஎனும் தன்மையுடையது) புறப்பொருள்)

இப்பாடலில் காக்கை என்னும் குறிப்பான் சொல், பறக்கும் தன்மையுடையது என்னும் பண்பில் குறியீடு பொருளாகி, வெண்காக்கை எனும் புறப்பொருள் கொண்டு வந்துள்ளது.

**சுட்டுக்குறி – வகைகள்**

சொல்சார்கலை வடிவமான (**Verbal Art Form** ) இலக்கியத்துள்ளும் சுட்டுக்குறியீட்டின் பயன் காணப்படுகிறது. தமிழைப் பொறுத்தவரையில் சுட்டுக்குறிப் பயன்பாட்டு மரபு முதற்காப்பியமான தொல்காப்பியத்திலிருந்தே தோற்றம்பெற்றுள்ளது . தொல்காப்பியர் ஆளும் சுட்டுக்குறிகளை,

1. சுட்டுச்சொற்கள்
2. வண்ணச்சுட்டுகள்
3. பொருட்சுட்டுகள்

என மூன்று வகையினவாகப் பகுக்கலாம்.

**சுட்டுச் சொற்கள்**

தொல்காப்பியர் நூன்மரபில் சுட்டு எழுத்துக்களாகக் குறித்துள்ள 'அ,இ,உ' என்னும் மூன்றினையும் சொற் சுட்டுக் குறிகளுக்குள்ளாகவே அடக்கலாம். இவ்வெழுத்துக்கள் எல்லாம் ஒருவரை அல்லது ஒன்றனைச் சுட்டுதலாகிய ஒருசெயலை மட்டும் ஆற்றுகின்றன. இக்குறிகளின் வழி , சுட்டப்படும் பொருளை நாம் இனங்காணமுடிகிறது.

**வண்ணச்சுட்டுகள்**

"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள"[6] என்னும் உயரியல் நூற்பா வண்ணச்சுட்டுக் குறிகளைப் பற்றிய குறிப்பினைத் வெளிப்படுத்துகிறது. இதில் குறிக்கப்படும் கறுப்பு, சிவப்பு என்னும் இரு வண்ணங்களும் ' சினம்' என்னும் ஒரே ஒருபொருண்மையினை மட்டும் சுட்டிக்காட்டிடஉதவுகின்றன.

**பொருட்சுட்டுகள்**

பொருட்சுட்டுக் குறிகளின் பயன்பாடு தான் தொல்காப்பியத்தில் மிகுதியாக உள்ளது.

**"தெய்வம் உணாவே மா மரம் புட் பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப"[7]**

இத்தொல்காப்பியவரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வம் , உணா, மா, மரம், புள், பறை,செய்தி, யாழின்பகுதி என்னும் கருப்பொருட்கள் அனைத்துமே பொருட்சுட்டுக்குறிகள் ஆகும்.

**குறியீட்டுக் குறி**

"ஒருக்குறிப்பீடு வேறொரு குறிப்பீட்டுக்குப் பதிலாக நிற்பது 'குறியீட்டுக்குறி' ஆகும்."[8]

**"பெருங் கடற்கரையது சிறுவெண் காக்கை**
**அறுகழிச் சிறுமீன் ஆரமாந்தும்**
**துறைவன் சொல்லிய சொல் என்**
**நிறைஏர் எல்வளை கொண்டு நின்றதுவே."**

**(ஐங்.பா.165)**

குறிப்பான் ⟶ குறிப்பீடு குறிப்பீட்டுக்குறி
(காக்கைப் (தலைவன்) (போல) புறப்பொருள்)

இப்பாடலில் நெய்தல் நிலத்தின் கருப்பொருளாகிய காக்கையானது பாடலின்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

குறிப்பானாகவும், தலைவனைக் குறிப்பீடாகவும் கொண்டும் , போல என்பது குறிப்பீட்டுக் குறியாகவும் வந்துள்ளது.

**தொகுப்புரை**

- சங்ககால அகத்திணை பாடல்களில் குறிப்பிடத்தக்க நற்றிணை, கலித்தொகை, ஐங்குறுநூறு ஆகியவற்றின் நெய்தல் திணைகளில் பேசப்பட்டுள்ள குறியீட்டு மொழிகளைப் பற்றி விரிவாக இவ்இயலில் அறியமுடிகிறது. மேலும், சங்ககால மக்களின் காதல், ஊடல், ஏக்கம், தனிமை, நெய்தல் திணைக்கே உரித்தான இரங்கல் ஆகிய உணர்வுகள் அனைத்தும்குறியீட்டு மெழிகள் மூலமே வெளிப்படுகிறது என அறியப்பட்டது.
- குறியீடுகள் சங்க இலக்கியங்களில் உள்ளுறை உவமை என்னும் முறைமையிலே வெளிப்படுவதாக அமைந்துள்ளது. அவ்வகையில் சங்கஇலக்கிய உள்ளுறை உவமைகள் பற்றியும், அவ்வுவமைகள் மேலைநாட்டார் பியர்ஸ்-ன் கோட்பாடுடன் பொருந்தி வரும் முறைமை பற்றியும் இவ்வியலில் அறிந்துகொண்டோம்.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர் மொ.இளம்பரிதி, குறியியல் ஒருசங்கப் பார்வை,ப. 10
2. ஆ.தனஞ்செயன், குலக்குறியீடுகளும் மீனவர் வழக்காறுகளும்,ப.150
3. முனைவர் மொ.இளம்பரிதி, குறியியல் ஒருசங்கப்பார்வை, ப. 10
4. மேலது, ப. 22
5. மேலது, ப. 23
6. முனைவர்.திருஞானசம்பந்தம் (உ.ஆ), தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற் 74
7. மேலது, நூற். 20
8. முனைவர்மொ.இளம்பரிதி, குறியியல் ஒருசங்கப் பார்வை, ப. 28